පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක : 124

අමාත්‍යාංශයේ නම : තාක්ෂණ අමාත්‍යාංශය

පාර්ලිමේන්තුවේ ක්‍රම සහ විධි පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තාව සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 124(6) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 124

நிறுவனத்தின பெயர்: தொழில்நுட்ப அமைச்சு

பாராளுமன்றத்தின் வழிவகைகள் பற்றிய குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 124(6) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Parliamentary Series Number: 124

Name of the Ministry: Ministry of Technology

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Ways and Means in terms of Standing Order No. 124 (6)

பாராளுமன்ற தொடர் இலக்கம் : 124

அமைச்சின் பெயர் : தொழில்நுட்ப அமைச்சு

	குழுவின் பரிந்துரைகள்	எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
1	மென்பொருள் போன்ற எண்ணிம உள்ளடக்கங்களின் இறக்குமதிகளின் மீது வரிகள் விதிக்கப்படவில்லை. எனவே உலகில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப வர்த்தகம் வளர்ந்து வரும் ஒரு வர்த்தகமாக இருப்பதனால் இந்த துறைக்கு வரி விதிக்கப்படுதல் வேண்டும்.	தற்போது, அத்தகைய வரி விதிக்கப்படவில்லை. இது தொடர்பாக ஆய்வு நடத்தப்பட்டு, இந்தத் துறையின் இருப்புக்கு இடையூறு ஏற்படாத வகையில் விதிக்கப்படும் வரிகள் குறித்து சாத்தியக்கூறு ஆய்வு நடத்தப்பட வேண்டும். அதனடிப்படையில், எதிர்காலத்தில் சம்பந்தப்பட்ட துறைகள்/சங்கங்கள்/நிறுவனங்களுடன் கலந்துரையாடி முறையான செயல்முறையைத் தயாரிப்போம் என நம்புகிறோம்.
2	இலங்கை சுங்கத்தின் ASYCUDA முறைமை புதிப்பிக்கப்படுவதோடு பிற அரச நிறுவனங்களின் தகவல் தொழில்நுட்ப முறைமைகளுடன் தொடர்பு கொள்ளும் திறன் இருக்கவேண்டும்	ASYCUDA அமைப்பின் புதுப்பிப்பு **நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின்** வழிகாட்டுதலின் கீழ் **இலங்கை சுங்கத்தால்** செய்யப்பட வேண்டும். **தொழில்நுட்ப அமைச்சு** தேவையான தொழில்நுட்ப உதவியை வழங்க முடியும். தொழில்நுட்ப அமைச்சானது அனைத்து **அரசு** நிறுவனங்களின் தகவல் தொழில்நுட்ப அமைப்புகளை ASYCUDA முறைமையுடன் ஒன்றோடொன்று இணைக்க உதவும் தேசிய தரவு பரிமாற்றத்தை (NDX) நிறுவ தேவையான பணிகளை மேற்கொள்கிறது. இந்த செயல்முறைக்கான தொடக்கப் புள்ளியாக, 2023.09.21 திகதிய (MOT/2023/02) இலக்க சுற்றறிக்கை இதற்குத் தயாராவதற்காக அனைத்து அரச நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டது.
3	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பணியகத்தினுள் அறிவையும் நிபுணத்துவத்தையும் தக்கவைத்திருப்பது நிதி ஊக்குவிப்பின்மையினாலும், பொருத்தமற்ற இடமாற்றக் கொள்கையினாலும் குறைவாகப் பயன்படுத்தப்படும் பயிற்சி வாய்ப்புக்களாலும் சவாலுக்கு உள்ளாகியுள்ளது.	பொதுத்துறையில் தகவல் தொழில்நுட்ப நிபுணர்கள் குழுவை உருவாக்க தேவையான ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். அந்தத் துறையில் தொழில் நுட்ப வல்லுநர்களுக்குத் தொழிலில் வழங்கப்படும் சம்பளத்துக்கு ஏற்றவாறு முறையான சம்பள முறைமை இருக்க வேண்டும். இதற்காக **நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சிடன்** இணைந்து வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது
4	BEPS இல் OECD/G20 உள்ளடக்கிய கட்டமைப்பின் உறுப்பு நாடுகளில் ஒன்றாக இலங்கை இருந்தும், "பொருளாதாரத்தை எண்ணிம மயமாக்குவதால் எழும் வரி சவால்களை நிவர்த்தி செய்வதற்கான இரு தூண் தீர்வு பற்றிய கூற்றுடன்" இன்னும் இணையவில்லை	இது தொடர்பாக, **வெளிநாட்டலுவல்கள் அமைச்சின்** ஊடாக முறையான ஆய்வுக்கு பின், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது

5	தரவுகளைப் பரிமாறி வர்த்தக முறைகேடான விலைப் பட்டியலிடலைக் கண்டுபிடிப்பதை மேம்படுத்துவதற்குச் சுங்க அதிகாரிகளை அனுமதிக்கும் புளொக்செய்ன் தொழில்நுட்பத்தினையும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தினையும் சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தல். இதனால், இலங்கைச் சுங்கம் அதன் வர்த்தகப் பங்காளர்களின் சுங்க திணைக்களத்துடன் நிகழ் நேரத்தில் பண்டங்களின் பெறுமதி கணிப்பு உள்ளிட்ட கொடுக்கல் வாங்கல் தரவுகளை பகிரலாம் என்பதோடு அதன் விளைவாக, விலை குறித்தலில் காணப்படும் முறைகேடுகளை மிக இலகுவாகக் கண்டுபிடிக்கவும் முடியும்.	நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் **இலங்கை சுங்கம்** தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தேவையான தொழில்நுட்ப உதவிகள் தொழில்நுட்ப அமைச்சினால் வழங்க ஏற்பாடு செய்யலாம்.
6	எண்ணிம உள்ளடக்கங்கள் மற்றும் சேவைகளுக்கான எச்எஸ் குறியீடுகளை அறிமுகப்படுத்துவதற்கும், ICT துறையின் மீது புதிய வரியின் தாக்கம் மற்றும் ஏனைய நாடுகளின் மிகச்சிறந்த நடைமுறைகள் ஆகியன பற்றிய விரிவான ஆய்வு ஒன்றை மேற்கொண்டதன் பின்னர் எண்ணிம உள்ளடக்கங்கள் மற்றும் சேவைகளுக்காக எண்ணிம வரியை அறிமுகப்படுத்துவதற்கும் முன்மொழியப்படுகின்றது.	புதிய எண்ணிம பொருளாதார உத்தியின் கீழ் இதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன. உலக வங்கியின் ஆதரவுடன் உத்தியினை தயாரிக்கும் பணி இறுதி கட்டத்தில் உள்ளதுடன் அமைச்சரவை அமைச்சர்களுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.
7	ASYCUDA முறைமை பொது-தனியார் கூட்டாண்மை (PPP மாதிரி) மூலம் இயங்கும் ஓர் புவிசார் செயல்பாட்டு அலுவலகம் மூலம் நிர்வகிக்கப்பட்டு இயக்கப்பட வேண்டும் மற்றும் ஒருங்கிணைந்த வருவாய் முகாமைத்துவ முறைமையுடன் இயங்கக்கூடியதாக மேம்படுத்தப்பட வேண்டும். ASYCUDA முறைமையில் தனித்துவமான அடையாள எண்ணாக இலங்கையின் தனித்துவமான இலக்க அடையாளம் (UDI) பரிந்துரைக்கப்படுகின்றது.	**இலங்கை தனித்துவ எண்ணிம அடையாள (SLUDI) திட்டம்** இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது 2025 ஆம் ஆண்டில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக வரும் தனிப்பட்ட அடையாள எண்ணை ASYCUDA முறைமையில் அடையாள எண்ணாகப் பயன்படுத்தலாம். அதற்கு, மேலே குறிப்பிட்டுள்ளபடி, தேசிய தரவு பரிமாற்றம் (NDX) பயன்படுத்தப்படலாம்.

8	இறக்குமதி மற்றும் ஏற்றமதி நடைமுறைகளில் மனித இடையீட்டினைக் குறைப்பதை உறுதிப்படுத்தும் செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்துவதன் மூலம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களை ஆய்வு செய்து பரிசீலிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் மின்வருடல் (Scan) இயந்திரங்கள் அதி நவீன மயமாக்கப்படல் வேண்டும் என்பதுடன் துறைமுகங்கள் மற்றும் இலங்கைச் சுங்கம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் ஓரிடத்திலேயே பண்டங்களைப் பரிசோதித்து உரியவர்களுக்கு விடுவிப்பதற்கான நிலையம் ஒன்றும் நிறுவப்படவேண்டும் என ஊக்குவிக்கப்படுகின்றது.	இலங்கையில் தேசிய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உபாயத்தினை தயாரிப்பதற்காக ஜனாதிபதி செயலகத்தின் கீழ் குழுவொன்று நிறுவப்பட்டுள்ளது. **தொழில்நுட்ப அமைச்சும் ஒரு அங்கத்தவராக உள்ளது.** **இலங்கை சுங்கம்** செயற்கை நுண்ணறிவு குழு வழிகாட்டலின் கீழ் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.
9	பொருளாதாரத்தை எண்ணிம மயமாக்குவதால் எழும் வரி சவால்களை நிவர்த்தி செய்வதற்கான இரு தூண் தீர்வு பற்றிய கூற்றுடன்' அரசாங்கம் இணைதல் வேண்டும் என விதந்துரைக்கப்படுகின்றது.	இது தொடர்பாக, **வெளிநாட்டலுவல்கள் அமைச்சு** மூலம் முறையான ஆய்வுக்கு பின், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.
10	ASYCUDA முறைமையை திறம்பட நிர்வகிக்கவும் பராமரிக்கவும் இலங்கை சுங்கத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவு (ICT இயக்குனரகம்) மேம்படுத்தப்படவேண்டும்.	**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு** மற்றும் இலங்கை சுங்கம் ஆகியவற்றின் வேண்டுகோளின் பேரில், தொழில்நுட்ப அமைச்சு இதற்கான உதவிகளை வழங்க முடியும்
11	இலங்கை தனித்துவ எண்ணிம அடையாளத்தை (SLUDI) நடைமுறைப்படுத்திய பின்னர் வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமையில் தனித்துவமான அடையாள இலக்கமாக தனிப்பட்ட எண்ணிம அடையாளத்தைப் பயன்படுத்தல்.	**SLUDI திட்டம்** இந்திய அரசு வழங்கும் மானிய நிதிமூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது மற்றும் இது 2025 முதல் செயல்படும். RAMIS இல் அடையாள எண்ணாக SLUDI இனைப் பயன்படுத்தலாம்
12	தனித்துவமான எண்ணிம அடையாளத்தினை பூரணமாக அமுல்படுத்தும் வரையில் இந்த நிறுவனங்கள் அனைத்தும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை பொதுவான பிரதான புலமாகப் பயன்படுத்துவதற்கு முன்மொழியப்படுகின்றது.	தற்போது பயன்பாட்டில் உள்ளது.

13	அரச நிறுவனங்களில் தகவல் தொழில்நுட்ப முறைமைகளை நிறுவுவது தொடர்பான திட்ட முன்மொழிவு அமைச்சரவை அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்படுகையில், அரசாங்க நிறுவனங்களின் ஏனைய தகவல் தொழில்நுட்ப முறைமைகளுடன் தகவல் தொழில்நுட்ப முறைமையை ஒன்றிணைக்கும் பொருட்டு முறைமையின் தொழில்நுட்ப ஆற்றல் மற்றும் இயங்குதன்மையை உறுதிப்படுத்த ஜனாதிபதியின் செயலாளரால் விதப்புரை செய்வதற்கு முன்மொழியப்படுகின்றது.	அதன் பிரகாரம் 2023.09.21ம் திகதிய MOT/2023/02 இலக்க சுற்றறிக்கை ஜனாதிபதி செயலகத்தின் வேண்டுகோளுக்கமைய வெளியிடப்பட்டுள்ளது. பரிந்துரைகள் தொழில்நுட்ப அமைச்சினால் வழங்கப்படும்.
14	2016 முதல் முன்மொழியப்பட்ட ஒருங்கிணைந்த வருவாய் முகாமைத்துவ முறைமை, பொது நிறுவனங்களின் தற்போதைய தகவல் தொழில்நுட்ப முறைமைகளின் நவீனமயமாக்கல் அல்லது இற்றைப்படுத்தலுடன் குறைந்தபட்சம் 2024 முதல் காலாண்டில் செயல்படுத்தப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது.	ITMIS தற்போது செயல்பாட்டில் உள்ளது நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு அதை மேம்படுத்தவும் ஏனைய முக்கிய நிறுவனங்களை அதனுடன் ஒருங்கிணைக்கவும் செயல்பட்டு வருகின்றது. தொழில்நுட்ப அமைச்சு தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கும்.

ஒப்பம்:./ ரணில் விக்கிரமசிங்க
தொழில்நுட்ப அமைச்சர்